ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயேநம:
அப்பன் திருவடிகளே சரணம்




உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீநிவாஸப்பெருமாள் - திருப்பதி.

# ஸ்ரீ.உ.வே. திருமாளிகை
# ரெ.வீரராகவ ஐயங்கார் ஸ்வாமியின் நூற்றாண்டு விழா
# நினைவுமலர்

நாள் : 10.11.2012 நந்தன ௵ ஐப்பசி உத்தரம்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

அப்பன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய

உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யராய்

எழுந்தருளியிருந்த மஹாவித்வான் [கீர்த்திமூர்த்தி]

# *ஸ்ரீ.உ.வே. திருமாளிகை ரெ. வீரராகவ ஐயங்கார் ஸ்வாமியின் நூற்றாண்டு விழா நினைவுமலர்*

நாள் :

நந்தன ௵ ஐப்பசி உத்தரம்

10.11.2012

# மறக்க முடியாத மஹான்

ஸ்ரீவைஷ்ணவச்சுடராழி ஸ்ரீமான் D.A.ஜோசப்,
பாண்டிச்சேரி.

இந்த உலகம் ஒரு அவசர உலகம்; சுயநலக்கார உலகம். கோடிகளைக் கொட்டிக் குவிக்கும் குபேரர்களை அது கவனிக்கும், கௌரவிக்கும். கவர்ச்சி காட்டும் கலைஞர்களுக்கென்று வாய் பிளக்கும், வாழ்த்துரை வழங்கும். பதவியில் இருப்போரைக் கண்டு பயந்து நடுங்கும், பணிவு காட்டும். ஆனால் அறிவும் ஆன்மீகமும் செழித்து விளங்கும் மஹான்களை அது கண்டு கொள்வதில்லை. தன் தோள்களைப் பிடித்து உலுக்கித் தன் கண்களைத் திருப்பும் வண்ணம் சில சம்பவங்களை நிகழ்த்திக் காட்டும் சிற்சில சான்றோரை மட்டுமே அது கவனிக்கிறது, கணக்கில் எடுத்துக் கொள்கிறது. அடக்கமே வடிவமாய் ஆர்ப்பாட்டமின்றி ஆன்மீகமே லட்சியமாய் வாழும் எத்தனையோ ஆன்றோர்களை அது கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அப்படி கவனிக்கப்படாமல் விடப்பட்டவர்கள் எத்தனையோ பேர்.

அவர்கள் அனைவரையும் பற்றிப் பேச நமக்கு வாய்ப்பும் இல்லை, வழியும் இல்லை. ஆனால் ஒதுக்க முடியாத ஒருவர் இருக்கிறார். அவரைப் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும். காரணம் - அவர் அடியேனுடைய ஆசான். அஞ்ஞான இருளிலிருந்து வெளிக்கொணர்பவர் என்று பொருள் தரும் குரு என்ற சொல்லுக்கும், போதிப்பதை நடந்துகாட்டுபவர் என்று பொருள்படும் ஆசாரியன் என்ற சொல்லுக்கும் இலக்கணமாய் வாழ்ந்தவர். அடியேனை நெறிப்படுத்தியவர், ஆட்கொண்டவர்; அறிஞனென்று அடியேனை மற்றவர் கூறும்படி ஆக்கியவர்.

இன்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஐப்பசி மாதம் உத்தர

நட்சத்திரத்தன்று அவதரித்தவர். வீரராகவன் என்று திருநாமம் இடப் பட்டவர். இவருடைய மேன்மையைப் புரிந்து கொள்ள நாம் சில நூறு ஆண்டுகள் பின்னோக்கிப் போக வேண்டும்.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலம். சிவகாசிக்கு அருகே உள்ள எதிர்க்கோட்டை என்ற ஒரு கிராமம். அதைச் சுற்றிலும் கொள்ளையர்களும், குற்றவாளிகளும் நிறைந்திருந்தார்கள். மன்னர் ஆட்சியும் மாவீரமும் அடக்கு முறையும் அங்கே பயன்படவில்லை. களையெடுக்க களையெடுக்க அங்கே குற்றமும் தீமையும் மறுபடியும் முளைத்துக்கொண்டே இருந்தன. வில்லும் வாளும் தோற்றுப் போகும்போது வேந்தன் என்ன செய்வான், பாவம்! மந்திரிகளையும், மதநம்பிக்கை வாதிகளையும் கலந்தாலோசித்தான்.

மஹான் ஒருவரை அங்கே குடியமர்த்தினால் அவருடைய ஞானக் கதிர் வீச்சு அந்த மண்டலத்தை சுத்தப்படுத்தும் என்று வழி கூறினார்கள் அவர்கள். அப்படிப்பட்ட ஒருவர் யார்? நாடித் தேடினான் நாடாள்பவன். வைணவச் செம்மல் ஒருவர் தென்பட்டார். இதே வீரராகவன் என்பது அவருக்குத் திருநாமம். அவரை அங்கே குடியமர்த்தினால் அக்ரமம் அழிந்துபோகும் என்று அனைவரும் கூறினார்கள். மன்னவன் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டார் அந்தப் பெரியவர். அவரைப் பல்லக்கில் அமர்த்தி அந்த மன்னன் அவரை எதிர்க்கோட்டையில் கொண்டு சென்று குடியமர்த்தினான். அந்தப் பகுதி நிலங்கள் அத்தனையையும் அவருக்கு மானியமாக ஸமர்ப்பித்தான்.

மன்னன் நினைத்தது நடந்தேறியது. நல்லார் ஒருவர் உளரேல் அங்கு பொல்லார் அனைவரும் திருந்துவரே! குற்றவாளிகளும் கொலைகாரர்களும் அந்த மஹான் முன் கும்பிட்டு விழுந்தனர். குணம் மாறித் திருந்தினர். அது நல்லோர் வாழும் பூமியாயிற்று. அந்த ஞானியின் பரம்பரையில் வந்தவர் தான் அடியேனுடைய ஆசானும், இன்று நூறாண்டு நிறைவு காண்பவருமான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீமான் ஸ்ரீவைகுண்டவாசி வீரராகவ ஐயங்கார் ஸ்வாமிகள்.

இந்தப் பரம்பரையில் தோன்றியவர்கள் அனைவருமே ஞானத்தில் பெரியவர்கள். இறையருட் செல்வர்கள். அதில் ஒருவர், பாம்பு கடித்தபோது, பூவில்லாத எருக்கம் செடிக்கு மந்திரம் சொல்லி உடனே பூக்கவைத்து அதைப் பிழிந்து அந்தச் சாற்றை கடிவாயில் இட்டு சிகிச்சை செய்து கொண்டாராம். ஒருவர், தன் ஞான ஆசாரியன் திருமாளிகையில் பல ஆண்டுகள் தங்கி அவருடைய பால வாரிசினை வளர்த்து ஆளாக்கி சிம்மாசனத்தில் அமர்த்தியதால் திருமாளிகை கோபாலையங்கார் என்று சிறப்பித்து அழைக்கப்பட்டார். திருமாளிகை என்ற அந்த அடைமொழி இன்றுவரை இந்தப் பரம்பரையில் அனைவருடைய திருநாமங்களின் முன்பும் சேர்க்கப் படுகிறது. திருமாளிகை கோபாலையங்கார் ஸ்வாமிகள் அருள்வாக்கு சித்தி பெற்றவர். ஸ்ரீசுதர்ஸன ஆழ்வானின் கருணையினை நிரம்பப் பெற்றவர். வல்லமை நிறைந்த மாந்த்ரீகர்களும் அவரைக் கண்டு அஞ்சுவர் என்பது செவிவழிச்செய்தி.

தேஹ பரம்பரை இப்படியென்றால் ஞான பரம்பரை இதைவிடப் பெருமை வாய்ந்தது. அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள் உடையவருடைய வலக்கரமாய் திகழ்ந்த முதலியாண்டானுடைய பரம்பரையில் அவதரித்த மஹானாகிய கோவில் கந்தாடை அப்பன் திருவடிகளில் ஆஶ்ரயித்தவர். அதாவது, ஸ்ரீராமாநுஜரால் நியமிக்கப்பட்ட ஸிம்மாஸனாதிபதிகளுள் கோயில் கந்தாடை அண்ணன்ஸ்வாமிகள் திருவடி ஸம்பந்தமுள்ளவர்கள் மிக அதிகம். ஸ்ரீமணவாளமாமுனிகள் கோயில் கந்தாடை அண்ணனுடன் அவர் திருத்தம்பியரான கோயில் கந்தாடை அப்பன் ஸ்வாமிகளையும் ஆசார்ய பட்டத்திற்குரியவராக்கினார். காவேரிக்கு வடக்கே உள்ள சீடர்கள் அப்பன் ஸ்வாமிகள் திருவடி ஸம்பந்தமுள்ளவர்களாகவும், காவிரிக்குத் தென்பால் உள்ள சீடர்கள் ஸ்ரீஅண்ணன் ஸ்வாமிகளது திருவடிஸம்பந்தமுள்ளவர் களாகவும் ஆனார்கள். ஆசானது முன்னோர்கள் திருவள்ளூரிலிருந்து வந்தவர்களாதலின், கோயில் கந்தாடை அப்பன் ஸ்வாமிகள் திருவடி ஸம்பந்தத்தோடு இங்கே வாழ்ந்துவரலானார்கள். கோயில் கந்தாடை

அண்ணன், அப்பன் இருவருமே ஒருவர்க்கொருவர் பஹிர்ப்ராணராக (ஈருடல்ஓருயிராய்) திகழ்ந்தவர்கள். அதனால்தான் மணவாளமாமுநிகள் கோவில்கந்தாடை அண்ணனை தம்முடைய அஷ்டதிக் கஜங்களில் ஒருவராகவும் அவருக்கு உறுதணையாக கோவில் கந்தாடை அப்பனையும் நியமித்து ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தை நிர்வகிக்கப் பணித்தார். இத்தகைய பெருமை வாய்ந்த கோயில் கந்தாடை அப்பன் திருவடி ஸம்பந்தம் கொண்ட குலத்தில் பரத்வாஜ கோத்திரத்தில் பிறந்த இந்த மஹானுக்கு பரம்பொருளின் அருள் பரிபூரணமாய் இருந்தது. அதனைப் பலமுறை உணரும் வாய்ப்புகள் அடியேனுக்கு நேர்ந்தன. அவற்றை மற்றொரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இவருடைய பெரிய தகப்பனார் மதுரையில் இருந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்புலவராய் திகழ்ந்தவர். பாண்டித்துரை தேவரால் மிகவும் கௌரவிக்கப்பட்டவர். ‘செந்தமிழ்’ என்ற பத்திரிகையின் ஆசிரியர். திருநாராயண ஐயங்கார் என்ற அவருடைய திருநாமம் மிகப்பிரசித்தி பெற்றது. அவருடைய பிரிய சிஷ்யராகவும், செல்வப்பிள்ளையாகவும் திகழ்ந்தவர் அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள். மதுரை தமிழ்ச்சங்கத்தில் தம் பெரியப்பாவின் மேற்பார்வையில் பணிபுரிந்தவர்.

பாண்டித்துரை தேவரின் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் சிறந்த அறிஞர்களின் உறைவிடமாய்த் திகழ்ந்தது. மதுரையில் தன் அவசரத் தேவைக்கு திருக்குறள் பிரதி ஒன்று கிடைக்கவில்லை என்ற ஒரு சம்பவத்தால் பாண்டித்துரைத் தேவர் அங்கே அந்த தமிழ்ச்சங்கத்தையே நிறுவினார் என்று கூறுவர். அவர் ஒரு சிறந்த தமிழ் அறிஞர். அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள் வியந்து கூறும் அளவு அவர் பாண்டித்யம் உள்ளவர். நல்ல விவாதங்களை பாண்டித்துரை அவர்கள் மிகவும் ரசிப்பார். ஒருமுறை அங்கிருந்த ஒரு சைவப் புலவர் அம்பாளுக்கு நாராயணி என்று பெயர் இருப்பதனால் நாராயணன் என்ற சொல் சிவனைத்தான் குறிக்கவேண்டும் என்றாராம். அப்போது பாண்டித்துரை தலைமைப்புலவராகிய திருநாராயண

அய்யங்கார் ஸ்வாமிகளை 'இதற்கு என்ன பதில்' என்கிற தோரணையில் பார்த்தாராம். அப்போது ஸ்வாமிகள் ''மகிஷி என்ற சொல் மஹாராணியைக் குறிக்கும். அதற்காக அதை ஆண்பாலாக்கி மகிஷன் என்ற சொல் மஹாராஜாவைக் குறிக்கும் என்று சொல்லமுடியுமா? மகிஷன் என்றால் எருமைமாடு என்றல்லவா அர்த்தம்?'' என்றாராம். இதைக்கேட்டு பாண்டித்துரை அவர்கள் மெய் சிலிர்த்து சிம்மாசனத்தை விட்டு இறங்கி சமயபேதம் பாராமல் ஸ்வாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தாராம். இப்படிப்பட்ட சூழலில் உருவானவர் அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள்.

அவர் ராமேஸ்வரம் தேவஸ்தான பாடசாலையில் தென்மொழியும் வடமொழியும் ஸம்ப்ரதாயரீதியாகக் கற்றவர். பால பண்டிதம் படித்துக் கொண்டிருந்த போதே ''பண்டிதம்'' வகுப்பு மாணவர்களுக்குப் பாடமும் சொல்லிக்கொடுக்கும் திறன் பெற்றிருந்தார். ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதியால் சிறந்த வித்வான் என்று கௌரவிக்கப்பட்டவர். ஒருமுறை மதுரை தமிழ்ச்சங்கம் மாணவர்களுக்கு சீவகசிந்தாமணியும், வித்துவான் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்று திருநாராயண அய்யங்கார் ஸ்வாமிகள் எண்ணினார். சென்னைப் பல்கலைகழகப் பாடத்திட்டக் குழுவில் திருநாராயணய்யங்கார் ஸ்வாமிகள் உறுப்பினர். மஹாமஹா உபாத்யாய உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் பாடத்திட்டக் குழுவிற்கு தலைவர் பொறுப்பிலிருந்தார். *(அப்போது அவர் சென்னை ஸர்வகலாசாலையில் பேராசிரியாராக இருந்தார்)* சென்னையிலிருந்து கிளம்பி மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு வந்தார். அவர் சிறிது காலம் முன்புதான் தானே சீவகசிந்தாமணி பதிப்பித்திருந்தாராம். அவர், சீவகசிந்தாமணியைக் கற்பிக்கும் திறன் படைத்தவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது என்ற கருத்துடையவராய் அய்யங்கார் ஸ்வாமிகளிடம் சீவகசிந்தாமணி கற்பிக்கும் திறனுள்ள ஆசிரியர்கள் இருக்கிறார்களா? - என்று கேட்டார். உடனே அய்யங்கார் ஸ்வாமிகள் அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகளை அழைத்து தமிழ்ச்சங்க பண்டித மாணவர்களுக்கு சீவக சிந்தாமணியை நடத்தச் சொன்னாராம்.

திரைமறைவிலிருந்து வெகுநேரம் அதை கவனித்துக்கொண்டிருந்த உ.வே.சா.அய்யர் அவர்கள் ''ஓ! ஆசிரியர்களைத் தயார் செய்துகொண்டுதான் இந்தத்திட்டம் தீட்டினீர்களா?'' என்று வியந்து கூறித் திரும்பிப்போனாராம்.

ஒருமுறை நாவலர் சோமசுந்தரபாரதியார் ஏதோ ஒரு பத்திரிகையில் ''தமிழர் திருமணத்தில் தாலி'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரைத் தொடரைத் தொடங்கி இருந்தார். அந்த கட்டுரைத் தொடரின் நோக்கம் - தாலிகட்டும் வழக்கம் தமிழருக்கு இல்லை என்பதும் அது வடநாட்டிலிருந்து இறக்குமதியானது - என்பதும் ஆகும். அதற்கு மறுப்புத் தெரிவித்து அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள் தக்க தமிழ் இலக்கிய ஆதாரங்களோடு அவரது கட்டுரை தவறு என்பதனை விளக்கி ஒரு கடிதம் எழுதினார். அதைப் பார்த்தவுடன் திரு.சோமசுந்தர பாரதியார் அவர்கள் மனம் திருந்தி அந்தக் கட்டுரைத் தொடரையே நிறுத்திவிட்டார். பின்னாளில் மாணவர்களிடையே ''கோனார் உரை'' என்று பிரசித்தியான நூலின் ஸ்தாபகரான அய்யம் பெருமாள் கோனார் மற்றும் கார்மேகக் கோனார் ஆகியோர் அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகளிடம் பலசந்தர்ப்பங்களில் இலக்கிய ஆன்மீக சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தவர்கள். அந்த வரிசையில் மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அரங்கராஜன் ஸ்வாமிகள், பிரபல மேடைப் பேச்சாளர் மீ.கந்தசாமிப் புலவர் ஆகியோரும் அடங்குவர்.

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகள் *(ஸ்ரீவைகுண்டவாஸி)* அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள் காஞ்சீபுரம் வந்திருந்தபோது அவரை வரவேற்று, தம் சிறந்த பதிப்புகளையும் பொருள் அன்பளிப்பையும் தந்து அவர்மீது தனக்கிருந்த கௌரவத்தை தெரிவித்திருக் கிறார்கள். ஸ்ரீவைகுண்டவாஸி ஸ்ரீஸ்ரீ வரதயதிராஜ ஜீயர்ஸ்வாமிகள் *(ஸ்ரீபெரும்புதூர்)* அடியேன் மூலம் ஸ்வாமிகளைப் பற்றிக்கேள்விப்பட்டு அவர் இல்லத்திற்கு எழுந்தருளி வெகுநேரம் உரையாடி மகிழ்ந்து திரும்பியிருக்கிறார்.

வாதத்தில் தோற்காதவர் என்ற பெயர் அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகளுக்கு இறுதிவரை நிலைத்திருந்து. ஒரே நூலுக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக விளக்கம் கூறும் ஆற்றல் படைத்த அவர். வடமொழி தென்மொழி ஆன்மீக இலக்கிய நூல்களில் ஈடு இணையற்ற புலமையும் பெற்றவர். தென்கலை ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவராயினும் வடகலை நூல்களை அத்துப்படியாகக் கற்றவர். பௌத்தம், சமணம், சைவம், சாக்தம், கௌமாரம் என அனைத்து ஸம்ப்ரதாயங்களிலும் பரிச்சயமுண்டு. அபார நினைவாற்றல் உள்ளவர். எந்த வினாடியும் எந்த நூலில் இருந்தும் சரமாரியாக மேற்கோள் கொடுக்கவல்லவர்.

அடக்கமே இலக்கணமாக வாழ்ந்து தமிழ்ச் சங்கத்திலிருந்து விலகியதும் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி எத்தனையோ அறிவிற்சிறந்த தலைமுறைகளை உருவாக்கியவர். இவருடைய மாணவர் களில் பலர் சமூகத்தில் மேன்மையான அந்தஸ்து பெற்று விளங்குகிறார்கள். பள்ளியிலிருந்து ஓய்வு பெறும்வரை அனாவசியமாக விடுமுறை எடுக்காதவர் என்றும், சரியான நேரத்திற்குப் பள்ளிக்கு வருபவர் என்றும் பெயர் பெற்றவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு ஒரு திக்கஜமாகத் திகழ்ந்து 96 திருநட்சத்திரம் பூர்த்தியாகக் கண்டு திருநாடு அலங்கரித்தவர். இன்று அடியேன் மூலம் ஓரளவுக்கு ஸ்ரீவைஷ்ணவக் கருத்துக்கள் உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று சேருகின்றன என்றால் அந்த பெருமை 100% அந்த மஹானையே சாரும்.

ஸ்ரீவைஷ்ணவச்சுடராழி
ப்ரவசன பாஸ்கரன் ஸ்ரீமான் D.A.ஜோசப்,
18, 4வது கிராஸ் (மாடியில்), ரெயின்போ நகர், புதுச்சேரி - 11
Ph:0413-2210187, Website : www.dajoseph.com. email : deyeje@yahoo.com.

ஸ்ரீ:



ஸ்ரீ உ.வே. ரெ. வீரராகவ ஐயங்கார் ஸ்வாமி